When only
The best is
Good Enough



Buy
Solide Pumps

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

தரமானதே சிறந்தது என்றால்



சொலிட்
பம்பையே வாங்குங்கள்

சுடர் 5: பிரமோதூத ஆடி 14 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1410 முஹர்ரம் பிறை 07 (30-07-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர் 148

# உளவாளிகள் ஊடுருவலை தடுக்க புலிகள் கண்காணிப்பு

## குடாநாட்டிற்குள் வருவதற்கும் போவதற்கும் அனுமதிதேவை

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குள் உள்வாளிகள் ஊடுருவல் செய்வதைக் கண்காணித்துத் தடுக்க விடுதலைப் புலிகள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

அதன் பொருட்டு யாழ்ப்பாண மாவட்டத்திற்குள் வருவதற்கும், இங்கிருந்து வெளியே போவதற்கும் தங்களிடம் முறையாக அனுமதி பெற வேண்டும் என்ற கட்டுப்பாட்டை அவர்கள் விதித்துள்ளனர்.

அரசாங்கத்தினால் அனுப்பப்பட்ட உளவாளிகள் பலரைத் தாம் கைது செய்துள்ளதாகவும்—

அதன் காரணமாகப் புதிய கட்டுப்பாட்டைக் கொண்டு வர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதாகவும்—விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

— விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயற்குழு நேற்று இது சம்பந்தமான ஓர் அறிக்கையை விடுத்திருக்கிறது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

அண்மைக் காலத்தில் சிங்கள அரசால் பிறபகுதியில் இருந்து (குறிப்பாக கொழும்பில் இருந்து) உளவாளிகளாக யாழ். மாவட்டத்திற்கு அனுப்பப்பட்ட பலரை கைது செய்துள்ளோம்.

அதே போல் இங்கிருந்து சிங்களப் படைக்குத் தகவல் தர வெளியே செல்ல முற்பட்ட சிலரையும் கைது செய்துள்ளோம்.

இவர்களிடம் இருந்து முக்கிய தகவல்களைக் கொண்ட பல வரைபடங்கள், ஆவணங்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி நிலையை ஸ்திரப்படுத்த புலிகள் தீவிர நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 30

கிளிநொச்சி நகரில் தமது நிலையை நிரந்தரமாக ஸ்திரப்படுத்தும் நடவடிக்கைகளில் விடுதலைப் புலிகள் நேற்று ஈடுபட்டிருந்தனர்.

ஆனையிறவு முதல் மாங்குளம் வரையான நெடுஞ்சாலையை தமது பூரண கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதிலும் புலிகள் தமது கவனத்தைச் செலுத்தினர்.

கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி முகாமுக்கு முன்னேறிச் சென்ற இராணுவம் சனிக்கிழமை அதிகாலை அங்கிருந்து பின்வாங்கியது. அதனைத் தொடர்ந்தே விடுதலைப் புலிகள் ஆனையிறவு முதல் மாங்குளம் வரை ஸ்திரமாக நிலைகொள்ளும் நடவடிக்கைகளில் நேற்று ஈடுபட்டனர்.

### பின்வாங்கினர்

கிளிநொச்சியில் இருந்த இராணுவ முகாம் முற்றாக அகற்றப்பட்டு விட்டது.

கடந்த ஒன்றரை மாதங்களுக்கு மேலாக விடுதலைப் புலிகளால் முற்றுகையிடப்பட்டிருந்தபோது அங்கு இருந்த இராணுவத்தினரும், கடந்த செவ்வாய் அங்கு போய்ச் சேர்ந்த இராணுவத்தினரும் ஆனையிறவுக்குப் பின்வாங்கி விட்டனர்.

முகாம் ஆகக் கடைசியாக அமைந்திருந்த நீர்ப்பாசனத் திணைக்களம் ஏற்கனவேசேத முற்றிருந்தது. அந்தக் கட்டடத்தையும் தகர்த்து விட்டே இராணுவத்தினர் அங்கிருந்து ஆனையிறவுக்குப் பின்வாங்கி

(3 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் போர் விமானங்கள் நேற்று சரமாரியான குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், ஜூலை 30

நேற்று யாழ். நகரப் பகுதியில் இலங்கை விமானப் படை விமானங்கள் மூர்க்கத்தனமாக குண்டு வீச்சில் ஈடுபட்டன.

காலை 10.30 மணியளவில் முதல் கட்டமாக இரண்டு அவ்ரோ விமானங்களும், ஒரு பொம்மரும் குண்டு வீச்சில் ஈடுபட்டன.

யாழ். மத்திய கல்லூரி, பண்ணை பொலீஸ் விடுதி, கொட்டடி சீனிவாசன் லேன், ஆகிய பகுதிகளில் குண்டுகள் வீழ்ந்து வெடித்தன.

யாழ் மத்திய கல்லூரியின் முன்புறக் கட்டடம் பெரிதும் சேதமடைந்திருக்கிறது.

மீண்டும் பகல் 12.15 மணி அளவில் நான்கு அவ்ரோ விமானங்களும் இரண்டு பொம்மர்களும் தாக்குதல்களை ஆரம்பித்தன.

இவை சரமாரியாக குண்டு வீச்சுகளை நடத்தின. இந்த குண்டுகளில் சில குருநகர் கடற்கரைவீதிப் பகுதிகளிலும் வீழ்ந்து வெடித்தன.

இதேவேளை —

நேற்று மாலை 4-45 மணி முதல் சுமார் 45 நிமிடநேரம் நான்கு பொம்மர்கள் யாழ் நகரப்பகுதி, நல்லூர் ஆகியவற்றுக்கு மேல் உறுமியவண்ணம் வரிசையாக வட்டமிட்டுப் பறந்தன.

இதனால் நகரமக்களும் நல்லூர் உற்சவத்துக்கு வந்திருந்தோரும் பெரும் அச்சமுற்றனர். (இ-உ-9)

### முச்சந்தி முரளி



கால்பேஸிலை வானச்சாகஸம் காட்டி அங்கத்தை ஆக்களை வியக்க வைக்கிற பிளேன்கள் நேற்று நல்லூருக்கு வந்த பக்தர்களுக்கு வரிசைபோட்டு பீதி உண்டாக்கிச்சினம் பாக்கயில்லையே......!

### யாழ். நகரில் போராளி வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 30

நேற்றுயாழ். நகரில் இடம் பெற்ற விமானக் குண்டு வீச்சுக்கு இலக்காகி விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி ஒருவர் வீரமரணமடைந்தார்.

இறந்தவர் லெப்ரினன்ட் சிறி என்பவர் ஆவார். [ஒ-9]

## அடுத்த சில தினங்களில் மின்விநியோகம் கிடைக்கும்

யாழ்ப்பாணம், ஜூலை 30

வடபகுதிக்கான மின்சார விநியோகம் அடுத்த சில தினங்களில் வழமைக்குத் திரும்பும் என நம்பப்படுகிறது.

விமானத் தாக்குதலால் கிளிநொச்சிப் பகுதியில் மின்வயர்கள் சேதமடைந்ததை அடுத்து வடபகுதிக்கான மின்சார விநியோகம் தடைப்பட்டிருந்தது.

கிளிநொச்சி இராணுவ முகாமுக்கு சமீபமாகவே இந்த சேதங்கள் ஏற்பட்டதால் இதனை திருத்த முடியாத நிலை இருந்து வந்தது.

தற்பொழுது கிளிநொச்சி பகுதியை விட்டு இராணுவம் வெளியேறியதை அடுத்து திருத்த வேலைகளை மின்சார சபை ஆரம்பிக்க உள்ளது.

திருத்த வேலைகளை பார்வையிட அடுத்த ஒரு சில தினங்களில் குழு ஒன்று யாழ் நகரிலிருந்து செல்ல உள்ளதாக அறியவருகிறது. (இ-9)

## மேலும் ஒரு கப்பல் வடக்கே வருவதற்கு தயாராகிறது!

யாழ் மாவட்டத்துக்குத் தேவையான கூடுதல் உணவுப் பொருள்களுடன் ஓரிருநாட்களில் மேலும் ஒரு கப்பல் வடபகுதி நோக்கிப்புறப்படவிருக்கிறது.

பிரஸ்தாப கப்பலில் பொருள்களை ஏற்றும்வேலைகள் கொழும்புத் துறைமுகத்தில் நடைபெற்று வருகிறது என்றும் பெரும்பாலும் புதன்கிழமை அளவில் கொழும்பிலிருந்து அது புறப்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இக்கப்பல் இவ்வார முடிவுக்குள் இங்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ-3)

## தமிழீழ மீட்பு நிதிக்கான பவுணிலும் மோசடியாம்!

### எச்சரிக்கையாக இருக்க வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூலை 30

தமிழீழ மீட்பு நிதிக்குப் பவுண் வழங்குவதற்காகப் புதிதாக நகை செய்விப்போரையும், பவுண் வாங்குவோரையும் நகை வியாபாரிகள் மோசடி செய்துள்ளது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

அதனைத் தொடர்ந்து நகை வியாபாரிகள் குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறு பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் அறிக்கை ஒன்றையும் விடுத்துள்ளனர்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பல தமிழ் மக்கள் எமக்கு இரண்டு பவுண் தங்கத்தைத் தருவதாக நகை வியாபாரிகளிடம் சென்று இரண்டு பவுண் பெறுமதியுள்ள தங்கத்தை அல்லது நகைகளை வாங்கி எம்மிடம் தருகிறார்கள்.

தங்கத்தை அல்லது நகைகளை இவர்களுக்கு விற்கும் பலர் மோசடியில் ஈடுபட்டு

[3-ஆம் பக்கம் பார்க்க]

## மினிபஸ் மீது ஹெலி சூடு! பெண்மணி காயமுற்றார்

### வல்லைவெளியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 30

வல்லைவெளியில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் வந்த மினிபஸ் மீது ஹெலி வேட்டுக்களைத் தீர்த்தது. அதன் விளைவாகப் பெண் ஒருவர் பலத்த காமைடைந்தார். கால் பிளந்த நிலையில் அவர் மானிப்பாய் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மினிபஸ் மீது ஹெலி வேட்டுக்களைத் தீர்க்க பஸ் நிறுத்தப் பட்டது. பயணிகள் பதறியடித்து ஓடிபற்றைகளுக்குள் பதுங்கிக் கொண்டனர் பற்றைகளின் மீதும் ஹெலி வேட்டுக்களைத் தீர்த்தது.

அப்பொழுது அந்தப் பெண் காயமடைந்தார். (ஒ-3)

## அகதிகள் தங்கியிருந்த மண்டபம் மீது ஹெலி தாக்கு

### மீசாலைப் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூலை 30

மீசாலை, வேம்பிராய் பகுதியில் அகதிகள் தங்கியிருக்கும் மண்டபம் ஒன்றின் மீது ஹெலிக்கொப்டா தாக்குதல் நடத்தியது.

பலாலிப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து வந்த சுமார் 150 பேர் வேம்பிராயில் உள்ள ''சர்வேசனாமி'' பிரார்த்தனை மண்டபத்தில் தங்கியுள்ளனர்.

இந்த மண்டபம் மீதே தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில் இரு பெண்பிள்ளைகள் சிறு காயங்களுக்கு இலக்காகினர். மண்டபம், சமையல் அறை பாத்திரங்கள் என்பன சேதமடைந்தன.

அங்கிருந்தவர்கள் பாதுகாப்பான இடங்களில் ஒதுங்கிக்கொண்டதால் உயிரிழப்பு ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இதே ஹெலி மீசாலை, புத்தூர்ச் சந்தியிலும் வேட்டுக்களைத் தீர்த்தது.

மாலை 5 மணியளவிலும் ஹெலி இப்பகுதியில் தாக்குதலை மேற்கொண்டது. (ஒ)

### சுபநேரம்

30-7-90

திங்கட்கிழமை ஆடி 14

★ சுபநேரம்:
12-03 — 01-33

● இராகுகாலம்
07-33 — 09-03

இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

## முல்லைத்தீவு முகாமிற்குள் ஹெலி இறங்க முயற்சி!

### புலிகள் எதிர்த் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூலை 30

நேற்று முல்லைத்தீவு இராணுவ முகாமுக்குள் ஹெலிக்கொப்டர் ஒன்று இறங்குவதற்கு பகீரத பிரயத்தனம் செய்தது.

முகாமிற்குள் ஹெலியை இறங்கவிடாது கடும் தாக்குதல் நடத்தப்பட்டதாக விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

புலிகளின் எதிர்த் தாக்குதலை அடுத்து ஹெலிக்கொப்டர் சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்துவிட்டு திரும்பிச் சென்றுவிட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு இராணுவ முகாமையும், கடந்த பல வாரங்களாக விடுதலைப்புலிகள் முற்றுகையிட்டிருப்பது தெரிந்ததே.

இதனிடையில் முல்லைத்தீவு முகாம் இராணுவத்தினர் வழமைபோல் இடையிடையே குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஷெல்களை ஏவி வருவதாகவும் தெரியவந்தது.

## மர நிழலில் வாழும் 2,600 திருமலைத் தமிழர்!

யாழ்ப்பாணம், ஜூலை 30

நம்பினால் நம்புங்கள்!

திருகோணமலையில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகளால், தமது உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஒரே நோக்குடன் தமிழர்கள் பலர் குடாநாட்டை நோக்கி வந்தார்கள் அல்லவா?

அவர்களில் 2,600 பேர் தங்குவதற்கு இடமின்றி மர நிழல்களின் கீழ் தமது காலத்தைக் கழிக்கிறார்கள்!

திருமலையில் இருந்து முதலில் முல்லைத்தீவு சென்ற இவர்கள் பின்னர் அங்கிருந்து தென்மராட்சிக்கு வந்து சேர்ந்தனர்.

தங்குவதற்கு இடவசதி எதுவும் இல்லாத நிலையில் இவர்கள் தவிக்கிறார்கள்.

இவர்களுக்கு தற்காலிக குடியிருப்பு வசதியாக கொட்டகைகள் அமைத்துக் கொடுக்கும் முயற்சியில் வாழ். செஞ்சிலுவைச் சங்கம் ஈடுபட்டுள்ளது. (அ-3)

## புல்மோட்டையில் தாக்குதல்; சிப்பாய்பலி; ஆயுதங்கள் மீட்பு

கொழும்பு, ஜூலை 30

திருகோணமலை மாவட்டத்தில் புல்மோட்டைச் சந்தியில் உள்ள இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதல் நடத்தியதில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்.

அந்த முகாமில் இருந்த பல்வேறு ஆயுதங்களையும் விடுதலைப் புலிகள் எடுத்துச் சென்றதாகவும் இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (ஒ-எ)

## சம்மாந்துறை நகரில் 5 முஸ்லிம்கள் சூட்டுக்கு பலி

சம்மாந்துறை நகரிலுள்ள பள்ளிவாசல் ஒன்றினுள் இருந்த ஐந்து முஸ்லிம்கள் சுட்டுக் கொல்லப்பட்டதாக ஏஜென்சிச் செய்திகளில் இருந்து தெரியவந்தது.

பள்ளிவாசல்பகுதிக்கு வந்த ஆயுதபாணிகள் திடீரென அங்கிருந்தவர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும், அப்போது ஐவர் கொல்லப்பட்டதாகவும் மேலும் 13பேர் காயமடைந்ததாகவும் இராணுவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி அந்தச் செய்திகள் தெரிவித்தன. (ஒ-எ)

## மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 9 தமிழ்க் கிராமங்கள் அம்பாறையுடன் இணைப்பு

கொழும்பு, ஜூலை 29

மட்டக்களப்பு நிர்வாக மாவட்டத்துக்கு உட்பட்ட ஒன்பது தமிழ்க் கிராமங்களை அம்பாறை நிர்வாக மாவட்டத்துடன் இணைக்கும் அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு வெளியிட்டிருக்கிறது.

சம்பந்தப்பட்ட ஒன்பது தமிழ்க் கிராமங்களும், அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களின் பொது எல்லையில் அமைந்துள்ளன.

முஸ்லிம்கள் அதிகமாக வாழும் அம்பாறை மாவட்டம் சிங்கள நிர்வாக மாவட்டம் என்பது தெரிந்ததே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## சின்னஞ்சிறு விளம்பரம்


### இறைச்சிக் கோழி விற்பனைக்கு

இறைச்சிக்கு உகந்த நல்ல இன சேவல்கள் விற்பனைக்கு உண்டு. விலைகுறைக்கப்பட்டுள்ளது. சற்குணராஜா அன் பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (சி/5277)

### தவறிவிட்டது

நாகமுத்து கணேசமூர்த்தி அடையாள அட்டை இல. 480670264 V தவறிவிட்டது. கிடைத்தவர்கள் தயவுசெய்து கோட்டைக்காடு மல்லாகம் என்ற முகவரிக்கு அறிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். அத்துடன் சீமெந்து கூட்டுத்தாபன அடையாள அட்டையும். ((13697)

உடுவிலுக்கும் - மானிப்பாய்க்கும் இடையில் அடையாள அட்டை முக்கிய சான்றிதழ்களும் உள்ளடக்கிய கறுப்பு நிற கைப்பை தவறிவிட்டது. கிடைத்தவர்கள் தயவுசெய்து நவாலி சென் பீற்றர் சனசமூக நிலையத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (13698)

### ஆங்கிலம்

ஜீ. சி. ஈ பரீட்சைக்கு உயர் கல்விக்கு, தொழிலாளருக்கு நவாலி மகேஸ்வர அநாதைகள் இல்லத்திற்கு அருகாமையில் அடுத்த புதன் கிழமை பதினொரு மணிக்கு ஆங்கில வகுப்பு தொடங்கும். இவ் இல்ல முகாமையாளருடன் தொடர்பு கொள்க. முன்னாள் அதிபர், ஆசிரியகலாசாலை, ஆங்கில விரிவுரையாளர் பரீட்சைத் திணைக்கள ஆங்கிலப் பரீட்சகர் சந்திக்கின்றார். (13845)

### V. K. M. Farm Centre

எம்மிடம் சுத்தமான முறைப்படி தயார் செய்யப்பட்ட முட்டையிடும் கோழிகளுக்கான தீனி (Layer mash) பெற்றுக்கொள்ளலாம். இறைச்சிக் கோழி சில்லறை விலை 50/- No: 12, கனகசபை லேன், [யாழ்: இந்துக் கல்லூரி பின்பக்கம்] யாழ்ப்பாணம். [13848]

### குழாய்க் கிணறுகாரருக்கு

உங்கள் வீட்டு தண்ணீர் ராங்குகளை நிரப்புவதற்கு நாடுங்கள். சாதாரண ராங் ஒன்றிற்கு ரூபா 150/- மட்டுமே. யூனிவேர்சல் சேவசர், ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு (கல்வியங்காடு சந்தியில் இருந்து 100யார் தூரத்தில்) (13951)

### Typewriters

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும் மற்றும் தமிழ் ஆங்கிலம் ரைப்பிங் செய்துகொடுக்கவும் Fudo Enterprises (Shiva Studio Upstair) Jaffna Road, Manipay.

(சி-5289)


## மாணவிகள் போராளிகளுக்கு சேவை

யாழ்ப்பாணம், ஜூலை 30
யாழ். பல்கலைக்கழக மாணவிகள் காயமடைந்த போராளிகளுக்குச் சேவையாற்றி வருகின்றனர்.

மாணவிகள் விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவினருடன் இணைந்து போராளிகள் தங்கி சிகிச்சை பெற்று வரும் மருத்துவமனைகளுக்குச் சென்று அவர்களுக்கு உதவி வருகின்றனர்.

இதேவேளை முதலுதவி பயிற்சி பெற்ற பல்கலைக்கழக மாணவர்களும் விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவினருடன் இணைந்து காயமடையும் போராளிகளுக்கு உடனடி சிகிச்சை அளிப்பதில் ஈடுபட்டு வருகின்றனர். [ஒ]

யாழ். பெரியாஸ்பத்திரி

# பெறுமதிவாய்ந்த உபகரணங்கள் பழுதடையும் ஆபத்து

யாழ்ப்பாணம், ஜூலை 30
யாழ். ஆஸ்பத்திரிக்கு அருகில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் விமானத் தாக்குதல்கள் காரணமாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியின் நவீன உபகரணங்கள் சேதமடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு யாழ் பஸ் நிலையப் பகுதியில் விழுந்து வெடித்த குண்டின் அதிர்வினால் யாழ். ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பகுதியில் உள்ள சில அறைகளின் கதவுகள் சேதம் அடைந்துள்ளன.

தற்போதைய நிலைமை நீடித்தால் எக்ஸ்-றே இயந்திரங்கள், ஈ.சி.ஈ இயந்திரங்கள் உட்பட பல பெறுமதிமிக்க நவீன உபகரணங்கள் பழுதடையும் அபாயம் ஏற்பட்டிருப்பதாக யாழ். ஆஸ்பத்திரி உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-10)

## பளையில் நிவாரணம்

பச்சிலைப்பள்ளி, ஜூலை 30
பளைப் பகுதியில் தஞ்சமடைந்துள்ள அகதிகளுக்கு இரண்டாம் கட்ட உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இம்முறை அதிகரித்த நிவாரணத் தொகைகளுக்கு உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளதாக பளை உதவி அரசாங்க அதிபர் சு.கந்தசாமி தெரிவித்தார். [ஒ-117]

## கிழக்கு அகதிகளுக்கு ஆடைகள்

யாழ்ப்பாணம், ஜூலை30
சென். மேரிஸ் சமூக அபிவிருத்திச் சபையினர் தமது பகுதி மக்களிடமிருந்து சேகரித்த ஆடைகளை, கிழக்கிலிருந்து அகதிகளாக வந்த மக்களுக்கு வழங்கினர்.

அகதிகளுக்கு ஆடைகளை வழங்கும் நிகழ்ச்சி சென். சாள்ஸ் பாடசாலையில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் யாழ். ஆசனக் கோவில் பங்குத்தந்தை ஜெபநேசன் அடிகளார், யாழ்.உதவி அரச அதிபர் திரு.சபாபதிப்பிள்ளை, கிராம சேவையாளர் திரு. சொக்கலிங்கம், சென்மேரிஸ் சமூக அபிவிருத்திசபை செயலாளர் திரு.அருள்பேட்வட்ட அவை உறுப்பினர்கள், சிற்றூரவை செயலாளர் திரு. பிறேடா ஆகியோரும் மற்றும் பலரும் கலந்து கொண்டனர். (இ)

## களஞ்சியத்தில் சீனி திருட்டு

கொழும்புத்துறை, ஜூலை 30
வேலியே பயிரை மேய்ந்த கதை போல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் காவலாளியே சங்கக் களஞ்சியத்தில் திருட முயன்று கையும் மெய்யுமாக அகப்பட்டாராம்.

இத் திருட்டுச் சம்பவம் சாவகச்சேரிப் பகுதியில் உள்ள விற்பனை நிலையம் ஒன்றில் இடம் பெற்றது.

களவாடிய சீனியின் ஒரு பகுதியும் மீட்கப்பட்டது. (இ-30)

## மாநகரசபை தேர்தல்கள்

சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய மாநகரசபைகளுக்கு எதிர்வரும் செப்டெம்பர் 26ஆம் திகதி தேர்தல்கள் நடத்தப்படும்.

இதனை மாநில உள்ளூராட்சி அமைச்சர் கோ. சி. மணி நேற்று அறிவித்தார்.

## போலி 500 ரூபா நோட்டுக்கள்

போலி ஐந்நூறு ரூபா நோட்டுக்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன என்று கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

இந்த நோட்டுக்கள் இந்தியா அல்லது தாய்லாந்தில் அச்சிடப்பட்டிருக்க வேண்டும் என்றும் கூறப்படுகிறது.

இதுவரை 140 போலி ஐந்நூறு ரூபா நோட்டுக்கள் கண்டு பிடிக்கப்பட்டதாகவும்—

இது தொடர்பாக நான்கு தமிழர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## சிங்கப்பூர் வேலைவாய்ப்பு: கவனம்! மோசடி நடக்கிறது

கொழும்பு, ஜூலை 30
சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் வேலை வாய்ப்புப் பெற்றுத்தருவதாக தொழில் ஏஜென்சிகள் பல இளைஞர்களையும், யுவதிகளையும் மோசடிசெய்துவருவதாகவும், இதுகுறித்துக் கவனமாக இருக்குமாறும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

உல்லாசப் பிரயாணிகளை அழைத்துச் செல்வதுபோல அழைத்துச்சென்றுவிண்ணப்பதாரிகளைப் பல ஏஜென்சிகள் ஏமாற்றுவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூர், மலேசியா ஆகிய இடங்களில் வேலைவாய்ப்புப் பெறுவதற்கு அந்தந்த நாடுகளின் முன்அனுமதியும் அங்கீகாரமும் தேவை.

முன் அனுமதி பெறப்பட்டிருப்பின், திரும்பி வருவதான பயணத்துக்கு டிக்கட் எடுக்க வேண்டியதில்லை. வெளிநாட்டுச் செலாவணியும் கொண்டு செல்லத் தேவையில்லை.

பதினைந்து நாள் தங்கியிருக்கும் விசா மட்டுமே உல்லாசப் பயணிகளுக்கு வழங்கப்படுகிறது. அவர்களே திரும்பி வருவதற்கான டிக்கட்டையும், வெளிநாட்டுச் செலாவணியையும் எடுத்துச் செல்ல வேண்டும்.

இந்த வகையில் விண்ணப்பதாரிகளை அழைத்துச் செல்லும் தொழில் ஏஜென்சிகள், அவர்களைத் தவிக்கவிட்டு விட்டு வந்து விடுவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம். (அ)

## ஊழியர் வருகை குறைவு

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஊழியர்களின் வருகை மிகவும் குறைவாகவே இருந்து வருகிறது.

ஊழியர்கள் காலையில் 9.30 மணிக்கு பின்பே அலுவலகத்துக்கு சமுகம் கொடுக்கின்றார்கள்.

அனேகமானோர் நண்பகலுடன் வீட்டிற்கு திரும்பி சென்று விடுகின்றார்கள். (இ-193)

## பிரேமதாச - ரஞ்சன் கொடும்பாவிகள் எரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 30
ஜனாதிபதி பிரேமதாச பாதுகாப்பு துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா ஆகியோரின் கொடும்பாவிகள் நவாலியில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்பட்டன.

பறைமேளம் சகிதம் ஊர்வலம் நடைபெற்றது, ஒப்பாரி சொல்லி அழும் நிகழ்ச்சியும் இடம் பெற்றது. (இ-113)

## வடமராட்சியில் 15 ஆயிரம் திருமலை அகதிகள்

வடமராட்சியில் 15 ஆயிரம் திருமலை அகதிகள் ஆலயங்களிலும், பாடசாலைகளிலும் தங்கியுள்ளனர்.

15 முகாம்களில் தங்கியுள்ள அகதிகளுக்கு உதவி அரசாங்க அதிபர் திரு.ரி.சந்திரசேகரம் நிவாரண உதவிகளை வழங்கி வருகிறார்.

இந்த முகாம்களில் 410 கர்ப்பிணித் தாய்மார்களும், 271 பாலூட்டும் தாய்மார்களும், 655 ஆறு வயதுக்கு உட்பட்ட சிறுவர்களும் தங்கியுள்ளனர். (இ-3)

## முதல் உதவி பயிற்சி

யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் இன்று திங்கட்கிழமை முதல் உதவி பயிற்சி வகுப்புகள் நடைபெறவுள்ளன.

கல்லூரியில் பயிலும் சகல மாணவர்களும், பொது மக்களும் இதில் கலந்து கொள்ளலாமென தெரிவிக்கப்படுகிறது. (இ-113)

## பாக்குநீரிணையில் தத்தளித்த மீனவர் காப்பாற்றப்பட்டனர்

சென்னை, ஜூலை 30
பாக்கு நீரிணையில் 5 தினங்களாக உணவும் நீரும் இன்றி தத்தளித்த ஐந்து இந்திய மீனவர்களை இந்தியக் கரையோரக் காவல்படையினர் காப்பாற்றினர்.

இவர்கள் சென்ற படகில் இருந்த எரிபொருள் டாங்கியில் கசிவுஏற்பட்டதால்கரைக்குத் திரும்ப முடியாத நிலையில் படகு நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தது.

தகவலறிந்த காவல்படையினர் விரைந்து சென்று மீனவர்களைக் காப்பாற்றி மண்டபம் அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். (இ-எ)

## தமிழ் பேசும் மாணவர் ஒன்றிய கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 30
தமிழ்பேசும் மாணவர் ஒன்றியத்தின் சகல பாடசாலைகளின் பிரதிநிதிகளையும் இன்று திங்கட்கிழமை காலை 9 00 மணிக்கு நல்லூர் கோயில் பின் வீதியில் அமைந்துள்ள மங்கையற்கரசி வித்தியாலயத்தில் சமுகம் தருமாறு கோரப்பட்டுள்ளது.

தென்மராட்சிப்பாடசாலை உயர்தர 90 ஆம் வருடமாணவர்களையும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளையும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நாளை 31 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு சமுகம் தரும்படியும் கோரிக்கை விடப்பட்டிருக்கிறது. [இ]

## நூலகம் இடம் மாற்றம்

கொடிகாமம் பொது நூலகம் பொதுமக்கள், நூலகர்கள் என்போரின் பாதுகாப்புக் கருதி கச்சாய் பிரதேச அலுவலகத்திற்கு இடம் மாற்றப்பட்டுள்ளது. (இ-57)

## காசோலை மாற்றுவதில் சிரமம்

புங்குடுதீவு, ஜூலை 30
சம்பளமாக காசோலை பெறும் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் அதனை மாற்றிக் கொள்வதில்சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

புங்குடுதீவு, நயினாதீவுநெடுந்தீவுஆகியபகுதிகளைச்சேர்ந்த அரச உத்தியோகஸ்தர்கள் தமது காசோலைகளை புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மூலமாகவே மாற்றிவந்தனர். தற்போது அதுவும் நிறுத்தப்பட்டு விட்டது. (இ - 131)


## இடமாற்றம்

யாழ். போதனா வைத்தியசாலையில் இயங்கி வந்த
**யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை கூட்டுறவு சிக்கன சேமிப்பு கடன் நிவிர்த்திச் சங்கம்**
தற்போதைய சூழ்நிலையின் பாதுகாப்புக் கருதி 18, கோவில் வீதி ஒழுங்கை, யாழ்ப்பாணம் என்னும் இல்லத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை சகல அங்கத்தவர்களின் கவனத்திற்கு அறியத் தருகின்றேன்.

1. விசேட கடன் யாவும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது
2. மற்றைய கொடுப்பனவுகள் யாவும் மேற்படி விலாசத்தில் 01-08-90இல் இருந்து நடைமுறைப்படுத்தப்படும்.

சி. கந்தையா,
தலைவர்.

[13954]



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் சுப்பிரமணியம் குருநாதன்**
(சட்டத்தரணி, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்)

தோற்றம்: 09 - 10 - 1924 மறைவு: 10 - 08 - 1989

திதி: 30 — 07 — 1990

ஆண்டொன்று சென்றாலும் உங்கள் நினைவலைகள் எம்மை விட்டு நீங்கவில்லை. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்களை நினைவு கூரும்
மனைவி, மக்கள்.

13/3, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
சுண்டிக்குளி. [13840]


# பகிஷ்கரிப்புக்கு மாறானோரை சமூகம் ஒரு போதும் மன்னிக்காது

## தமிழ் பேசும் மாணவர் ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 30
எமது பரீட்சைப் பகிஷ்கரிப்புக் கோரிக்கைகளுக்கு மாறானவர்களை சமூகம் ஒரு போதும் மன்னிக்க மாட்டாது.

தமிழ் பேசும் மாணவர் ஒன்றியம் விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கை விவரம் வருமாறு:-

தமிழ் பேசும் மாணவர் ஒன்றியம், அரசின் கல்வி ஒடுக்குமுறைகளை எதிர்த்துப் போராடும் வகையில் எடுத்த தீர்மானம் பரீட்சை ஒத்தி வைக்கப்பட வேண்டும், அவ்வாறு நடைபெறாது விட்டால் பரீட்சையை தமிழ் பேசும் மாணவர் பகிஷ்கரித்தல் வேண்டும் என்பதே.

நீதிக்காக போராடும் மாணவர்களின் நியாயமான இந்தக் கோரிக்கையை தமிழ் கூறும் நல்லுலகம் ஏற்றுள்ளது.

ஆயினும் எமது இன வரலாற்றில் புல்லுருவிகளையும், சமூகத் துரோகிகளையும் காலத்திற்குக் காலம் எமது போராட்டத்தை காட்டிக் கொடுக்கும் கயவர்களையும், நாமறிவோம்.

எமது போராட்ட வரலாற்றில் இறுதிக் கட்டத்திற்கு நாம் இப்போது தயாராகின்றோம். எனவே இனத்துரோகிகள் இனம் காணப்படுவர். அவர் மாணவராயினும் சரி, அதிகாரிகள் ஆயினும் சரி, அல்லது சமூகத்தில் எம்மட்டத்தில் உள்ளவரானாலும் சரி எக்காரணம் கொண்டும் மன்னிக்கப்படமாட்டார்கள்.

அத்தகையவர் தமிழ் ஈழ மண்ணில் வாழும் வரை எமது போராட்டம் பின்தள்ளப்படும். எனவே எவராவது எமது கோரிக்கைக்கு மாறாக இருந்தால் அவர்களை சமூகம் ஒருபோதும் மன்னிக்காது என்பதை உறுதியாகத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 30
யாழ் கல்வித்திணைக்கள முறைசாராக்கல்விப் பிரிவினரால் நல்லூர் ஸ்தான சீ.சீ. த.க. பாடசாலை [சாதனா] யில் எதிர்வரும் 1 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதி வரை நடைபெறவிருந்த பயிற்சி வகுப்பு 3 ஆம் திகதி முதல் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. [இ-5]

## ஆளுநர் மாநாடு முடிவு

புதுடில்லி, ஜூலை 30
இந்தியாவில் உள்ள மாநில ஆளுநர்களின் இரண்டு நாள் மாநாடு புதுடில்லியில் முடிவடைந்தது.

இறுதி நாள் [illegible] பிரதமர் வி.பி.சிங் பேசினார். (இ-எ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 30
பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10மணிக்கு இன்றைய நெருக்கடிநிலை தொடர்பான முக்கிய கருத்தரங்கு ஒன்றை நடத்தவிருக்கிறது.

பல்கலைக்கழக சிரேஷ்ட பொது அறையில் நடைபெறும் இந்தக் கலந்துரையாடலில் [illegible] கள் பங்குபற்றுவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ)

## சர்வதேச விற்பனை சந்தை

சர்வதேச விற்பனைச் சந்தை ஒன்று இலங்கையில் நடைபெற இருக்கிறது.

கொழும்பு குதிரைப் பந்தயத் திடலில் இச்சந்தையை நடத்துவது என்று பிரதமர் டி. பி. விஜேதுங்க தலைமையில் நடந்த மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது. (இ-எ)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**கார்த்திகேசு சின்னத்தம்பி**
(கற்கண்டு)

தோற்றம்: 08 - 10 - 1911 மறைவு: 10 - 08 - 1989

திதி: 30 — 07 — 1990

கண்ணை இமை காப்பது போல் எங்களை காத்து இறுதியில் மீளாத்துயில் கொண்ட அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:

அன்பு மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரங்கள்.

சுன்னாகம் மேற்கு,
சுன்னாகம். [13701]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## உதயன்

### செய்யவேண்டியது!

வடக்கு - கிழக்கில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கை தீர்வல்ல; அரசியல் தீர்வுதான் வழி; கலந்தாலோசனை, கருத்தொருமித்தல், செயலிணக்கம் என்ற அடிப்படையில் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதியும் அரசினரும் இன்னமும் தயாராக உள்ளனர்.

இவ்வாறு மாலைதீவுக்குச் சென்றிருந்த இலங்கைப் பிரதமர் திரு. டி. பி. விஜேதுங்க அங்கு வைத்துத் தெரிவித்திருக்கிறார். பிரதமர் மட்டும் என்ன, ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸாவும் தெற்கில் நடக்கும் கூட்டங்களில் எல்லாம் இதனைத்தான் சொல்லி வருகிறார்.

அரசியல்வாதிகளான அவர்களை விடுங்கள். இலங்கை இராணுவத்தின் திறமைமிக்க தளபதியாகக் கருதப்பட்டு, முதலில் கிழக்கின் தளபதியாகவும், இப்போது வடக்கின் தளபதியாகவும் யுத்தத்தை முன்னெடுத்துச் செல்லும் மேஜர் ஜெனரல் கொப்பேகடுவவே, விடுதலைப் புலிகளை வெல்வது கடினம் என்றும்—

இன்றைய பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கை தீர்வாக மாட்டாது; அரசியல் தீர்வு தான் இறுதியானதாக இருக்கும்: அதனைக் காண வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தையும், அரசியல் தலைவர்களையும் பொறுத்தது என்றும் - கூறிவிட்டார்.

தளபதி கொப்பேகடுவ தனது நிலையை - கருத்தைத் தெரிவித்து ஒரு வாரத்துக்கு மேலாகி விட்டது.

புலிகள் வெட்ட வெட்டத் தழைப்பவர்கள்; அ[illegible]களை வெல்ல முடியாது. அவர்களை அழிப்பதாகக் கூறிக் கொண்டு சாதாரண தமிழ் மக்களை வீணாக ஏன் கொல்ல வேண்டும். யுத்தத்தை நிறுத்தி அரசியல் தீர்வுக்கு முதற்படியான பேச்சுவார்த்தையில் இறங்க வேண்டும். இதனை அரசாங்கமே செய்ய வேண்டும்— என்ற கருத்தைத்தான் ஜெனரல் கொப்பேகடுவ ஓர் உணர்வறிகுறியாக (Feeler) அரச பத்திரிகைகள் மூலம் கூறியிருக்கவேண்டும்.

பிரேமதாசாவும், விஜேதுங்காவும் அந்த உணர்வறி குறியைப் புரிந்துகொண்டார்களோ இல்லையோ, பாதுகாப்புத்துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா புரிந்து கொள்ளவே இல்லை வடக்கைப் பிடிக்கும் வரை தாக்குதல்கள் ஓயாது என்று அவர் கூறியிருக்கிறார்.

இதனால் அனுபவம் வாய்ந்த அரசியல் அவதானிகள், விமர்சகர்கள் மத்தியிலேயே பெரும் மயக்க நிலை உருவாகி உள்ளது.

தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்று ஜனாதிபதியும், பிரதமரும் கூறிவருவதுதான் உண்மையான நிலைப்பாடா அல்லது புலிகளை அழிப்பதாகக் கூறி, அவர்களில் ஒருவரையும், அப்பாவித் தமிழர்களில் பத்துப்பேரையும் என்ற வீதாசாரத்தில் கொன்று தமிழர்களை இன அழிப்புச் செய்வதுதான் உள்மனத்து நிலைப்பாடா என்பதைக் கண்டறிய முடியாமல் அவர்கள் திணறுகிறார்கள்.

அவர்கள் மட்டுமல்ல! முழு உலகத்தினரிடமும் அதே சந்தேகமே குடிகொண்டிருக்கிறது.

தலையிருக்க வாலாட அனுமதிக்கப்பட்டுள்ளதா? வாலை ஆடச் சொல்லிவிட்டுத் தலை வெளி உலகத்துக்கு வேஷம் பூண்டிருக்கிறதா?

தலைவேறு வால்வேறு ரகங்களாயின், தலை சரியான தலைமைத்துவ அதிகாரம் உடையதாக இருந்தால், - அது வெளியில் சொல்வதையே உள்மனதிலும் நினைத்தால், - அரசு யுத்தத்தைத் தான் நிறுத்திவிட்டு உகந்த தீர்வுக்கு ஏற்பாடு செய்யவேண்டும் அதுவே சரியான மார்க்கமாகும்.

# மாங்குளம் பகுதி தொடர்ந்து ஸ்தம்பித நிலையில்

## 5 வாரங்களாக அலுவலகங்கள் எதுவும் இயங்கவில்லை

மாங்குளம், ஜூலை 30

மாங்குளத்தில் கடந்த 5 வாரங்களாக அரச அலுவலகங்கள் செயலிழந்து உள்ளன.

முக்கியமான 'தபாலகம், மக்கள்வங்கி, இலங்கைவங்கி, தேசியவீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, மகாவித்தியாலயம் ஆகியவை தொடர்ந்து இயங்காததை அடுத்து மாங்குளம் ஸ்தம்பித நிலையில் இருந்து வருகிறது.

விமானக்குண்டு வீச்சினால் ஏற்பட்ட சேதங்கள் ஒருபுறம் இருக்க திருடர்களின் அட்டகாசமும் அங்கு அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடைக[illegible], அலுவலகங்கள், மகாவித்தியாலய விடுதிகள் ஆகியவை திருடர்களின் கைவரிசைக்கு உள்ளாகி இருக்கின்றன. [இ-94]

## நல்லூர் பகுதி விவசாயிகளுக்கு பங்கீட்டு அடிப்படையில் மண்எண்ணை விநியோகம்

திருநெல்வேலி, ஜூலை 30

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் விவசாயிகளுக்கு பங்கீட்டு அடிப்படையில் மண்எண்ணை விநியோகம் செய்ய முயற்சி எடுத்து வருகிறது.

ஆரம்ப நடவடிக்கையாக நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எல்லைக்கு உட்பட்ட விவசாயிகளின் விவரம் திரட்டப்படுகிறது.

சம்பந்தப்பட்ட விவசாயிகள் பயிர் செய்யும் காணியின் அளவு, பயிர்வகை மற்றும் விவரங்களை சங்கக் கிளையில் உடன் பதிவு செய்யும்படி கேட்கப்பட்டிருக்கிறது. (உ-143)

## பனம் பொருள் உற்பத்தியில் ஈடுபடக் கோரிக்கை

கொழும்புத்துறை, ஜூலை30

யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து தெங்கு, பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களும் பனங்கட்டி, பனம்சீனி. பனம் உணவுப் பொருள் உற், பத்தியில் கூடுதலாக ஈடுபட வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

பனம் கள் இறக்குவதற்குப் பாவிக்கப்படும் பனை மரங்களிலிருந்து பதநீர் உற்பத்தி செய்து எமது பிரதேசத்துக்குத் தேவையான பனங்கட்டி, பனம்சீனி, பனாட்டு, பனம் குளிர்பானம், சத்துணவுப் பொருள்கள் போன்ற உப உணவுப் பொருள்களை உடனடியாக உற்பத்திசெய்து மக்களின் அத்தியாவசியத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

இப்படி மேலும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (இ-30)

## பிரார்த்தனை

மாங்குளம், ஜூலை 30

நாட்டில் ஏற்பட்டு வரும் நெருக்கடி நிலையை அடுத்து அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் தினமும் அரைமணி நேரம் மௌன பிரார்த்தனை நடைபெற்று வருகிறது. [இ-94]

### நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

#### ஆற்றுவாய் வந்து!

பூம்பொழில்சேர் நல்லைப் புரவலனே! பாவகியே!!
நாம்படும் பாட்டைநீ நன்கறிவாய் - ஆம்நிசமே
நல்ல நிலைப்பாட்டை நாட்டில் நிலைநாட்ட
வல்விரைவில் ஆற்றுவாய் வந்து.

— கவியரசு வெண்பாமணி முருகசூரியன்

[இன்று நல்லூர்க் கந்தசுவாமி 4 ஆம் திருவிழா]

## அகதிகளுக்கு உதவி

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள சுமார் 100 குடும்பங்களைச் சேர்ந்த 500 அகதிகளுக்கு ஒரு கிழமைக்குத் தேவையான உணவுப்பொருள்களும், உடைகளையும் வழங்கி உள்ளதாக 'தென்றல்' சமூக சேவைக் குழுவின் தலைவர் செல்வன் கா. யோ. கிரிதரன் தெரிவித்தார். (ஓ)

## ஆயுர்வேத டாக்டர்களுக்கும் அரச நியமனம்

கொழும்பு, ஜூலை 30

டாக்டர்களை அரச சேவைக்கு திரட்டும் போது, ஆயுர்வேத டாக்டர்களுக்கும் நியமனம் வழங்கப்பட வேண்டும்.

சுகாதார அமைச்சை தாம் இவ்வாறு பணித்திருப்பதாக ஜனாதிபதி பிரேமதாஸா நேற்றுத் தெரிவித்தார்.

## முல்லைத்தீவில்

யாழ்ப்பாணம், ஜூலை 30

முல்லைத்தீவு நகரம் சன நடமாட்டமின்றி வெறிச்சோடிக்கிடப்பதாக அங்கிருந்து சனிக்கிழமை வந்தவர்கள் தெரிவித்தனர்.

அங்கிருந்து மக்கள் வெளியேறி முள்ளிவாய்க்கால், புதுக்குடியிருப்பு ஆகிய பகுதிகளில் தஞ்சம் அடைந்துள்ளனர். (இ-3)

## விடுதியில் இருந்தவர்கள் பணயக் கைதிகள் ஆயினர்!

### துப்பாக்கி மனிதன் கைவரிசை

லண்டன், ஜூலை30

துப்பாக்கி மனிதன் ஒருவன் நேற்று லண்டனில் உள்ள இரவு விடுதி (கிளப்) ஒன்றில் ஐம்பதுபேரைப் பணயக்கைதிகளாகப் பிடித்து வைத்துள்ளான்.

தன்னையும் பணயக் கைதிகள் சிலரையும் லெபனான் தலைநகர் பேரூட்டிற்கு எடுத்துச்செல்ல விமானம் ஒன்றை ஒழுங்கு செய்தால்தான் பணயக்கைதிகள் அனைவரும் விடுவிக்கப்படுவர் என்பது அந்த துப்பாக்கி மனிதன் விதித்துள்ள நிபந்தனையாகும்.

இரவு விடுதியைச் சுற்றி வளைத்த பாதுகாப்புப் படையினர், துப்பாக்கி மனிதனுடன் பேச்சுக்கள் நடத்திவருகின்றனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

துப்பாக்கி மனிதன் ஒரு லெபனான் பிரசை என்று சொல்லப்பட்டது. (ஒ-எ)

## தமிழகத்திலுள்ள அகதிகள் வங்கியில் கடன்பெற வசதி

சென்னை, ஜூலை 30

தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் வங்கிகளில் கடன் பெற்று தொழில் செய்ய மாநில அரசு வசதி செய்துள்ளது.

அகதிகள் மறுவாழ்வுப் பணிகளை கவனிக்கும் விசேட அதிகாரி திரு சி.எம்.இராம்தாஸ் நேற்று வேலூரில் செய்தியாளர்களிடம் இத்தகவலை வெளியிட்டார்.

உதவித்தொகைகளும் மானியங்களும் அகதிகளுக்குக் கிடைக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் திரு. இராம்தாஸ் மேலும் சொன்னார். [இ-எ]

## சமாதான போராட்டம் நடத்த மங்கையற்கரசி முடிவு

கொழும்பு, ஜூலை 30

சமாதானப் போராட்டம் ஒன்றை நடத்துவதற்காக திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் லண்டனில் இருந்து இலங்கை வரக்கூடும் என்று கொழும்பில் இருந்து வெளியாகும் 'சண்டே ஐலண்ட்' செய்தி ஒன்றைப் பிரசுரித்துள்ளது.

பெரும்பாலும் எதிர்வரும் அக்டோபரில் அவர் வரலாம் என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

## நெடுஞ்சாலையை தம்வசமாக்க இராணுவம் கவனம் செலுத்தும்

வவுனியா - ஆனையிறவு நெடுஞ்சாலையை தம்வசமாக்குவதில் இராணுவம் முக்கிய கவனம் செலுத்துமாம்

இதனை வடக்குத் தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ தெரிவித்ததாக நேற்று மாலை ஏஜன்சிச் செய்திகள் தெரிவித்தன.

விடுதலைப்புலிகள் தாக்குதலை நடத்தி விட்டு மறைந்து விடுவதால் ஆனையிறவு -வவுனியா நெடுஞ்சாலை முழுவதையும் இராணுவம் தம்வசப்படுத்தினால், அது தாக்குதல் நடத்த இலகுவாக இருக்கும்.

எனவே இராணுவம் இதில் முக்கிய கவனம் செலுத்தும்— என்று அவர் கூறியதாக அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (அ-எ)

## பிரெஞ்சு நிறுவனம் மருந்து உதவி

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ். மாவட்டத்துக்கு தேவையான மருந்து வகைகளை எம். எஸ். எவ் என்னும் பிரெஞ்சு நிறுவனம் வழங்கியுள்ளது.

யாழ். செஞ்சிலுவைச் சங்கம் மூலம் இந்த உதவியை அந்த நிறுவனம் வழங்கியுள்ளது. (இ-3)

## சிவில் அதிகாரி

கொழும்பு, ஜூலை 30

மட்டக்களப்பு - திருகோணமலை நிர்வாக மாவட்டங்களில் சிவில் இணைப்புஅதிகாரியாக திரு. டி. கே. திஸநாயகா நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இவர் தற்சமயம் கப்பல், துறைமுக அமைச்சின் செயலாளராக பணிபுரிந்து வருகின்றார். [இ-எ]

## உளவாளிகள் ஊடுருவ-----

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கள், புகைப்படங்கள் என்பன எம்மால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இப்படியாக தகவல் பெறும், உளவாளிகளைக் கண்டுபிடிக்க, கட்டுப்படுத்த நாம் யாழ். மாவட்டத்திற்குள் வருவோரினதும், யாழ். மாவட்டத்தை விட்டு வெளியேறுவோரினதும் தகவல்களைப் பெற உள்ளோம்.

### மக்கள் ஒத்துழைப்புத் தேவை

இதனால் பொதுமக்களுக்கு சில சிரமங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. போராட்ட காலத்தில் இப்படியான உளவாளிகளை ஊடுருவ விடாமல் தடுப்பது பொதுமக்களின் கடமையாகும்.

எனவே ஏற்படும் சிரமத்தையும் பொருட்படுத்தாமல் பொதுமக்களை எமக்கு பூரண ஒத்துழைப்பு தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

புதிய கட்டுப்பாட்டு நடவடிக்கையின் பொருட்டு பின்வரும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன:-

★ யாழ். குடாநாட்டை விட்டு வெளியேறும் சகல வாகனங்களும் யாழ். முத்திரைச் சந்தியில் இருந்தே புறப்படும்.

★ யாழ். குடாநாட்டுக்குள் (வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி) வரும் சகல வாகனங்களும் யாழ். முத்திரைச் சந்திக்கே கொண்டு வரப்பட்டு பயணம் செய்யும் பயணிகள் குறித்த விபரங்கள் விடுதலைப் புலிகளால் பெறப்பட்ட பின்னர் பயணிகளுக்குரிய பயணப் பாதுகாப்பு ஒழுங்குசெய்து கொடுக்கப்படும்.

★ வாகனங்களோ, பயணிகளோ, புறப்படுவதற்கு 48 மணிநேரத்திற்கு முன்னர் பயணிகள் போக்குவரத்து தொடர்பகத்தில் அதனை பதிவு செய்தல் வேண்டும்.

★ அனுமதிக்கப்பட்ட வாகனங்கள், அனுமதிக்கப்பட்ட பயணிகள் மாத்திரமே குடாநாட்டை விட்டுச்செல்ல முடியும்.

★ அனுமதிகப்படாத பயணிகளை ஏற்றும் வாகனங்கள் பயணத்தை மேற்கொள்ள அனுமதிக்கப்படமாட்டாது. (அ-உ)

## கிளிநொச்சி நிலையை- - -

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

னர்.

முகாமை விட்டு வெளியேறுவதற்கு முன்னர் இராணுவத்தினர் அதனைச் சுற்றி பல மிதி வெடிகள், கண்ணிவெடிகளை வைத்துவிட்டு வந்திருக்கக்கூடும் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

### கண்ணி வெடிகள் அழிப்பு

எனவே பொதுமக்கள் எவரும் இப்போதைக்கு அப்பகுதிக்குச் செல்லக்கூடாது என்று விடுதலைப் புலிகள் கேட்டுள்ளனர்.

இவற்றை அழிப்பதில் விடுதலைப் புலிகள் நேற்று ஈடுபட்டிருந்தனர்.

### முகாமின் சரித்திரம்

சனிக்கிழமை மூடப்பட்ட கிளிநொச்சி முகாம் கடந்த பல தடவைகள் தாக்குதலுக்கு இலக்காகியது குறிப்பிடத்தக்கது.

★ 1972ல் இடம் பெற்ற கிளர்ச்சியின் போது கிளிநொச்சி பொலீஸ் நிலையம் மீது தாக்குதல் மேற் கொள்ளச் சென்ற சிங்களத் தீவிரவாதிகள் ஆனையிறவில் வைத்து கைது செய்யப்பட்ட பின் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

★ பின்னர் ஈ.பி.ஆர்.எல். எவ். இயக்கத்தினர் இந்தப் பொலீஸ் நிலையம் மீது தாக்குதல் மேற்கொண்டனர்.

★ இதனையடுத்து பொலீஸ் நிலையம் இராணுவமயப்படுத்தப்பட்டது. தொடர்ந்து தமிழீழ ராணுவத்தினர் வெடிகுண்டு அடங்கியலொறி ஒன்றை பொலீஸ் நிலையத்தினுள் அனுப்பி தாக்குதல் மேற் கொண்டனர்.

அதன் பின்னர் பொலீஸ் -இராணுவக் கூட்டு முகாம் பெற்றோலியக் கூட்டுத்தாபன கட்டடம், தபால் நிலையம், நீர்ப்பாசன திணைக்கள கட்டடம், நகர மண்டபம் ஆகிய கட்டடங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டது.

தொடர்ந்து விடுதலைப் புலிகள் இந்த முகாமை சுற்றி வளைத்து முற்றுகையிட்டு இராணுவத்தை வெளியேற விடாது வைத்திருந்தனர்.

★ பின்னர் இந்தியப் படை வந்ததை அடுத்து முகாம் நீர்பாசனத் திணைக்கள கட்டடத்தில் மட்டும் இயங்கி வந்தது.

★ இந்தியப்படை வெளியேறியபின் இந்த முகாமை மூடுவதற்கு இணங்கப்பட்டிருந்தது. ஆயினும் மோதல்கள் ஆரம்பித்ததை அடுத்து அது கைகூடவில்லை.

★ இதனையடுத்து கடந்த ஜூன் மாதம் 14 ஆம் திகதி விடுதலைப் புலிகள் இந்த முகாம் மீது கடும் தாக்குதலை மேற்கொண்டதுடன் இராணுவத்தினர் வெளியேற முடியாத வாறு முற்றுகையிட்டிருந்தனர். (அ-9)

## தமிழீழ---

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

வருவது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இப்படியான மோசடியில் ஈடுபடுபவர்கள் குறித்து நாம் கடுமையான நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

புதிதாக பவுண் அல்லது நகைகளைச் செய்யும் தமிழ் மக்கள் எம்மிடம் வரும்போது தயவுசெய்து அது எங்கு வாங்கப்பட்டது, எங்கு செய்யப்பட்டது என்ற பற்றுச்சீட்டையும் கொண்டு வருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இதன்மூலம் மோசடி செய்கின்ற வியாபாரிகள் மேல் நாம் உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியும் — என்று உள்ளது. [அ]

# அம்பாறை மாவட்டத்தில் நடந்தது என்ன?

## பொறியியலாளர் ஒருவர் தகவல்

அம்பாறை மாவட்டத்தில் குறிப்பாக கல்முனை, பாண்டிருப்பு, மூன்றாம் குறிச்சி கிராமங்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர் இராணுவத்தினரால் சுட்டும், வெட்டியும், சயனைட் கத்தியால் குத்தப்பட்டும் கொல்லப்பட்டுள்ளனர். கல்முனையில் இருந்து கடந்த ஒன்பதாம் திகதி புறப்பட்டு சில தினங்களுக்கு முன் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த அரச திணைக்களத்தைச் சேர்ந்த பொறியியலாளர் ஒருவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

அங்கு நடைபெற்ற அனர்த்தங்கள் குறித்து அவர் தெரிவித்ததை படித்துப் பாருங்கள்.

ஜூன் மாதம் 11 ஆம் திகதி கல்முனைப் பொலீஸ் நிலையமும், அதைத் தொடர்ந்து இராணுவ முகாமும் தாக்கப்பட்டன.

பொலீஸ் நிலையத்தில் இருந்தவர்கள் சரண் அடைந்தனர். இராணுவத்தினருடன் மோதல் நடந்தது. 11 இராணுவத்தினர் முதல் நாள் பலியானார்கள். தொடர்ந்து சண்டை நடந்ததில் 40 இராணுவத்தினர் இருந்த முகாமில் இருந்து 15 இராணுவத்தினர் தப்பி கடல் மூலம் சென்று விட்டனர். முகாமும் மூடப்பட்டது.

### ஷெல்லுக்கு 20 பேர் பலி

அதன் பின்பு சடையன் தலாவ இராணுவ முகாமில் இருந்து ஷெல் தாக்குதல் கல்முனை மீது மேற்கொள்ளப்பட்டது. அதில் இருபது பேர் பலியானார்கள். பள்ளிவாசலுக்கு வழிபாட்டுக்குச் சென்ற இரு முஸ்லீம்களும், தம்பிலுவில் தமிழ் வித்தியாலய அதிபரும் அதில் அடங்குவர்.

இதைத் தொடர்ந்து ஒரு வாரமாக மயான அமைதி நிலவியது.

24 ஆம் திகதி களுவாஞ்சிக்குடிப் பகுதியில் இருந்து கல்முனை மூன்றாம் குறிஞ்சிப் பகுதிக்கு இராணுவத்தினர் முன்னேறி வந்தனர். அன்று கல்முனை நகரில் மட்டும் சண்ணுக்கு தெரிந்தவர்கள் சுடப்பட்டதில் 200 பேர் பலியானார்கள். அரசாங்க ஊழியர்களும் அதில் அடங்குவர்.

இறந்தவர்களின் சடலங்களை போராளிகளின் தாயிகளில் போட்டு [illegible] பெரும் பான்மையான சடலங்கள் 6.7 நா[illegible] றப்படாமல் துர் நாற்றம் வீசத் தொடங்கியது.

கடற்கரைப் பகுதியில் கிடந்த சடலம் ஒன்றில் சயனைட் கத்தி வெட்டுக் காயம் காணப்பட்டது.

பாண்டிருப்பு, மூன்றாம் குறிச்சி, கல்முனை பகுதிகளில் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட இராணுவத்தினர் கிராமம் கிராமமாக தேடுதல் நடத்தினார்கள்.

இதில் கைது செய்யப்படுபவர்கள் மறுநாள் சடலமாகத்தான் மீட்கப்படுவது வழக்கமாகி விட்டது.

### ஆறு தடவைகள் சுற்றிவளைப்பு

மொத்தமாக ஆறு தடவைகள் சுற்றிவளைப்பு இடம் பெற்றது. முதலாம், இரண்டாம் தர சுற்றிவளைப்புக்களில் 200 பேர் கைதாகி கொல்லப்பட்டனர்.

கல்முனை வைத்தியசாலைக்கு முன்பாகஉள்ள கடை ஒன்றில் 83 பேரின் மண்டை ஓடுகள் மீட்கப்பட்டன.

பாண்டிருப்பு பகுதியில் 60 பேர் கொல்லப்பட்டனர்.

காரைதீவில் 25ஆம் திகதி நடைபெற்ற சுற்றிவளைப்பில் பொறியியலாளர், [illegible] பேர் கொல்லப்பட்டனர்.

கல்முனைப் பொலீஸ் தாக்குதலில் தப்பிய பொலீஸ்காரரும், அவரது தம்பியும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

ஜூலை ஆறாம் திகதி நடந்த சுற்றிவளைப்பில் கல்முனையில் 32 பேரும், பாண்டிருப்பில் 90 பேரும் கொல்லப்பட்டனர்.

சுற்றிவளைப்பில் கைது செய்யப்படுபவர்கள் மில் ஒன்றில் நெல் காய விடும் இடத்தில் படுக்க வைத்துத் தாக்கப்பட்டனர்.

நானும் இரண்டு தடவை சுற்றிவளைப்பில் சிக்கினேன் ஒருமாதிரி உயிர் தப்பினேன்.

தற்சமயம் கல்முனை வாடிவீட்டுக்கு அருகில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது அந்த சுற்றாடலில் மூன்று மைல்களுக்கு சகல கட்டடங்களும் உடைக்கப்பட்டன. அங்கு பொலீஸ் நிலையமும் திறக்கப்பட்டுள்ளது.

காரைதீவில் பெரிய முகாம் ஒன்றை இராணுவம் திறந்துள்ளது. எந்த நேரமும் சுற்றி வளைப்பு நடக்கிறது. மக்கள் பதட்டத்துடன் வாழ்கிறார்கள்.

நான் அங்கிருந்து மட்டக்களப்புபோய், பின் கொழும்பு போய் யாழ்ப்பாணம் வந்துள்ளேன். (இ-3)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உதயன்

30 - 7 - 1990 திங்கட்கிழமை


# கப்பலிலிருந்து பொருள் இறக்கும் வேலை இன்று ஆரம்பமாகலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 30 கொழும்பில் இருந்து அத்தியாவசியப் பொருள்களுடன் வரும் கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் இன்று பகல் ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் இருந்து அத்தியாவசியப் பொருள்களுடன் இந்தக் கப்பல் புறப்பட்டது. கப்பல் முல்லைத்தீவில் பொருள்களை இறக்கிவிட்டு யாழ்ப்பாணம் நோக்கி இன்று காலை 6 மணிக்கு புறப்படவிருப்பதாக நேற்று மாலை யாழ்ப்பாணத்துக்கு தகவல் அனுப்பப்பட்டது.

இன்று பகல் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படும் இந்தக் கப்பலில் இருந்து இன்று பகலே பொருள்களை இறக்கும் வேலைகளை ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தக் கப்பலில் 500 தொன் உணவுப்பொருள்களே கொண்டுவரப்படுகின்றன.

பொருள்கள் இறக்கும் வேலைகள் இரு நாட்களில் பூர்த்தி அடையும் என்றும், பின்பு இந்தக் கப்பல் திருமலை போய் மா ஏற்றி வரும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## சரக்குக் கப்பலில் பயணிகளை அனுப்புவது சாத்தியம் இல்லை

யாழ்ப்பாணம், ஜூலை 30 சர்வதேசச் சட்டத்தின்படி பொருள்கள் ஏற்றும் கப்பலில் பயணிகளை ஏற்றமுடியாது. ஆதலால் பயணிகளை ஏற்றிச் செல்ல ஒரு கப்பலை ஒழுங்கு செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

செஞ்சிலுவைச் சங்க அதிகாரி ஒருவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உணவுப் பொருள்களுடன் வரும் கப்பலில் 26 வெளிநாட்டு பாஸ்போர்ட்காரரை அழைத்துச் செல்ல ஏற்பாடாகியிருந்தது.

ஆனால் சர்வதேச சட்ட நடைமுறைக்கு ஏற்றதாக அந்த ஏற்பாடு அமையாததால் பயணிகள் கப்பல் ஒன்றை ஒழுங்கு செய்ய இருப்பதாக அந்த அதிகாரி தெரிவித்தார். (இ-3)

## வெளி மாவட்ட பஸ்சேவை நேற்று மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 30 யாழ். நகரிலிருந்து வெளி மாவட்டங்களுக்கான பஸ் சேவை நேற்று முதல் மீண்டும் ஆரம்பமானது.

கடந்த சில வாரங்களாக சேரதீவுக்கும், இயக்கச்சிக்கும் அப்பால் பஸ் சேவைகள் எதுவும் நடைபெறவில்லை.

ஆனால் நேற்று முதற்தடவையாக நண்பகல் அளவில் சேரதீவுக்கு ஒரு மினிபஸ்ஸும் மாலையில் வவுனியாவுக்குஒரு பஸ்ஸும் புறப்பட்டுச் சென்றன.

இன்று மேலும் சிலபஸ்கள் கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளுக்குச் செலலும்என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

பிரயாணத்துக்கு அனுமதி பெற்ற பயணிகளை மட்டுமே ஏற்றிக்கொண்டு இந்த பஸ்கள் சேவையில் ஈடுபடும். (இ-9)

## சுதந்திரக்கட்சி ஆதரவு தந்தது ஏன்?

கொழும்பு, ஜூலை 30 வடக்கு- கிழக்கு யுத்தத்தில் ஈடுபட்டுள்ள ஆயுதப்படையினருக்கு ஆதரவு தெரிவிக்கவே இந்தியா சென்ற அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழுவில் சுதந்திரக் கட்சி இடம் பெற்றது; அரசுக்கு ஆதரவளிப்பதற்காக அந்தக் குழுவில் இடம்பெறவில்லை,

எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இவ்வாறு தெரிவித்தார். (ஒ-எ)

## திருமலையில் அகதிகளுக்கு நிவாரணம் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 30 வன்செயல்களினால் திருகோணமலை மாவட்டத்திற்குள்ளேயே இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க அகதிகளுக்கான ஐ நா. ஸ்தானிகராலயம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

ஒரு மாதத்துக்கு மேலாக மூடப்பட்டிருந்த நிலாவெளியில் உள்ள இந்த ஸ்தானிகராலய அலுவலகம் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

இடம்பெயர்ந்தோருக்கான ஆறாயிரம் ரூபா கொடுப்பனவும், உலர் உணவும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஓ-3)

## திருமலை

## அகதிகள் வருகை குறைந்தது

யாழ்ப்பாணம், ஜூலை 30 திருகோணமலையில் இருந்து முல்லைத்தீவுக்கான அகதிகள் வருகை குறைந்துள்ளது.

திருகோணமலையில் இருந்து வள்ளங்கள் மூலமாக அகதிகள் தற்சமயம் வருவதில்லை. பெரும்பாலானவர்கள் காடுகள் ஊடாக கால்நடையாகவே முல்லைத்திவு வருகின்றனர்.

திருகோணமலையில் இருந்து வந்த 2000 குடும்பங்களைச் சேர்ந்தவர்களே தற்போது முல்லைத்தீவில் தங்கி உள்ளனர். மற்றவர்கள் அங்கிருநது யாழ்ப்பாணம், மன்னார் பகுதிகளுக்கு சென்றுள்ளனர். [இ-3]

## புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரி; போதிய வசதிகள் இல்லை

யாழ்ப்பாணம், ஜூலை 30 புதுககுடியிருப்பு அரசினர் வைத்தியசாலையில் போதிய மருந்து வகைகளும், வைத்திய வசதிகளும் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்திவு மாவட்ட வைத்தியசாலை மூடப்பட்டு புதுக்குடியிருப்பிலேயே அந்த வைத்தியசாலை இயங்கி வருகிறது.

முல்லைத்தீவு மாவட்ட வைத்திய அதிகாரியும், மற்றைய வைத்தியர்களும் புதுக்குடியிருப்பில் கடமையாற்றி வருகின்றனர். (இ-3)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்(பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 392/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 30-07-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது


## தூக்கியவர்மீது சீறிய பாம்பு

யாழ்ப்பாணம், ஜூலை 30 அடிபட்ட நாகம் ஒன்று அதனைத் தாக்கியவர் மீது சீறிப்பாய்ந்தது. நாகம் தீண்டியவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

சம்பவம்பற்றித்தெரியவருவதாவது:-

உரும்பராய் அம்மன்றோட்டில் கிணறு ஒன்றினுள் நாகம் ஒன்று தவறுதலாக விழுந்து விட்டது. கிணற்றுக்குள் தடி ஒன்று வைக்கப்பட்டது. நாகமும் அதில்ஏறி வெளியே வந்தது. வெளியே வந்த பாம்பை அடித்தனர். அது மயங்கிக் கிடந்தது.

பாம்பு இறந்துவிட்டதாக நினைத்த ஒருவர் அதனைத் தூக்கினார். அது திடீரென ஆவேசமுற்று சீறிப் பாய்ந்து தூக்கியவரைத் தீண்டியது. நாகம் தீண்டப்பட்டவர் இரத்தினம் என்பவர். இப்போது மானிப்பாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

## மலேஷியாவில் அமைச்சர் ஹேரத்

கொழும்பு, ஜூலை 30 இலங்கை வெளியுறவு அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் மலேஷியத் தலைநகர் கோலாலம்பூரில் பிரதமர் மஹதிருடன் பேச்சுக்கள் நடத்தினார்.

வெளியுறவுச் செயலாளர் பெர்னாட் திலகரத்தினா, மலேஷியாவுக்கான இலங்கைத் தூதர் செ. இராசதுரை ஆகியோரும் பேச்சுக்களின் போது கலந்துகொண்டனர். (ஒ-எ)

## ★ இலங்கைக்கு அமைதிப் புறாக்கள்!

புதுடில்லி, ஜூலை 30 இந்திய அமைதிப் படையை கௌரவிக்கும் விதத்தில் இந்திய அஞ்சல் திணைக்களம் தபால் தலை ஒன்றை இன்று வெளியிடுகிறது.

இரண்டு ரூபா பெறுமதியான இந்த முத்திரையில் இலங்கைக்கு அமைதிப் புறாக்கள் சில பறந்து செல்வது போன்ற காட்சி சித்திரிக்கப்பட்டுள்ளது. (அ-9)

## பிலிப்பீன்ஸ் பூகம்பம்: இடிபாட்டிற்குள் 13 நாட்கள் சிக்கியிருந்த இருவர் மீட்பு!

மணிலா, ஜூலை 30 பிலிப்பீன்ஸில் பூகம்பம் ஏற்பட்ட 13தினங்களின்பின்னர், கட்டட இடிபாடுகளுக்குள் இருந்து ஆண் ஒருவரும், பெண்ஒருவரும் உயிருடன் மீட்கப்பட்டனர்.

இடிபாடுகளுக்கு இடையே இருந்து முனகல் சத்தங்கள் வருவதை அவதானித்த மீட்புப்பணியாளர்கள் அவர்களை மீட்டு எடுத்தனர்.

மழைநீரையும் சிறுநீரையும் குடித்து உயிர் வாழ்ந்ததாக அவர்கள் தெரிவித்தனர்.

இந்தப் பூகம்பத்தில் சுமார் ஆயிரத்து 600பேர் உயிரிழந்தனர் என்பது தெரிந்ததே!

## ட்ரினிடாட் பிரதமர் ராஜினாமாசெய்யஉடன்பாடு?

லண்டன், ஜூலை 1ı ட்ரினிடாட் பிரதமர்மொரிசன் தனதுபதவியை ராஜினாமாச் செய்வதாக உடன்படிக்கை ஒன்றில் கையெழுத்திட்டுவிட்டார் என்று அவரைப் பணயக் கைதியாக வைத்திருக்கும் கறுப்பின முஸ்லிம் தீவிரவாதக் குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

பிரதமருடன் அவரின் அமைச்சர்கள் சிலரும் நாடாளுமன்றக் கட்டடத்தினுள் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டுள்ளனர் என்பது தெரிந்ததே.

ஆட்சியை தீவிரவாதக் குழுவிடம் ஒப்படைப்பதாகவும் பிரதமர் மொரிசன் அந்த உடன்பாட்டில் கூறியிருக்கின்றார் என்றும் அப்பேச்சாளர் கூறினார்.

அடுத்த 90 தினங்களில் பொதுத் தேர்தல் ஒன்று ட்ரினிடாட் தீவில் நடத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## கொப்பேக்கடுவவின் அந்த 10 நாள் அவகாசம்

கொழும்பு, ஜூலை 30 வடபகுதி யுத்த முனையில் அடுத்த பத்து தினங்கள் மிகத் தீர்க்கமான காலம் என்று மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேக்கடுவ கடந்த 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கூறியிருந்தார் அல்லவா!

அதனை நினைவுபடுத்திய வடபகுதித் தளபதியான திரு. கொப்பேக்கடுவ, "அந்தக் காலப்பகுதியின் முதல் அரைவாசி நாட்களில் பாதுகாப்புப்படையினர் கணிசமான அளவு முன்னேற்றம் கண்டிருக்கின்றனர்" என்று வெள்ளிக்கிழமை சொன்னார் என கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

## சிங்களக் கிராமங்களைப் பாதுகாக்க ஊர்காவல் படைக்கு புதிதாக 50 ஆயிரம் பேர் திரட்டப்படுவர்

கொழும்பு, ஜூலை 30 வடக்கு, கிழக்கு மாகாணத்தின் எல்லைப் புறச் சிங்களக் கிராமங்களைப் பாதுகாக்க ஐம்பதாயிரம் ஊர்காவல் படையினரைத் திரட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

எல்லைப் புறச் சிங்களக் கிராமங்கள் மீதான தாக்குதல்கள் அண்மைக் காலமாக அதிகரித்து வருவதைத் தொடர்ந்தே ஊர்காவல் படையைப் பலப்படுத்துவது என்று அரசு முடிவு செய்திருப்பதாகக் கொழும்புச் செய்தி ஒன்று தெரிவித்தது.

கடந்த சில தினங்களில் நான்கு எல்லைப் புறச் சிங்களக் கிராமங்களில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் 48 சிங்களவர்கள் கொல்லப்பட்டனர் என்று அரச வட்டாரங்கள் கூறின.

ஊர்காவல் படைக்கு புதியவர்களைத் திரட்டுவதற்கு, இப்பிரிவின் பொறுப்பதிகாரியான சிரேஷ்ட பொலீஸ் அதிபர் சுமித் லியனகே ஈடுபட்டுள்ளார். (இ-எ)

## மன்னாருக்கு கப்பலில் உணவு

கொழும்பு, ஜூலை 30 'அமேஸன்' என்ற கப்பல் மூலம் நானூறு மெட்ரிக் தொன் உணவுப் பொருள்கள் மன்னாருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## சிப்பாய் உட்பட மூவர் கைது

கொழும்பு, ஜூலை 30 மாத்தறை மாவட்டத்தில் கிராம விழிப்புக் குழுவைச் சேர்ந்த பதின்மூன்று பேர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக இராணுவச் சிப்பாய் ஒருவர் உட்பட மூவரைப் பாதுகாப்புப் படையினர் கைது செய்தனர்.

இத்தகவலை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா வெளியிட்டார்.

அரசுக்குத் தகவல் கொடுத்தனர் என்பதற்காக இந்த 13 பேரையும் வேறு இருவரையும் ஜே. வி. பி. சந்தேக நபர்கள் [illegible] துச் சென்று பின்னர் சுட்டுக் கொன்றனர். (இ-எ)

## அரசியல் தீர்வே வழி என்று இப்போது கூறுகிறார் சிறிமா!

கொழும்பு, ஜூலை 30 தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுதான் உகந்த வழி. எவ்வாறேனும் ஓர் அரசியல் தீர்வைக் கண்டுபிடித்தாக வேண்டும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவியும், சுதந்திரக்கட்சித் தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்திருக்கிறார்.

கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

தமிழர் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வுதான் காணப்பட வேண்டும் என்று திருமதி பண்டாரநாயக்க இரண்டு வாரங்களுக்கு முன்னர் பத்திரிகைப் பேட்டி ஒன்றில் தெரிவித்திருந்தது தெரிந்ததே.

"அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேசக்கூடாது என்று நான் ஒருபோதும் சொன்னதில்லை. இலங்கைத் தமிழரின் பிரச்சினைக்கு இறுதியில் அரசியல் தீர்வைத்தான் கண்டுபிடித்தாக வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் இலங்கை அரசு கடைப்பிடித்து வந்த குறுகிய கண்ணோட்டத்துடனான கொள்கைதான் இன்றைய நெருக்கடிக்குக் காரணமாகும்.

அப்பாவித் தமிழர்களைக் கொல்லும்படி மக்களைத் தூண்டுவதை நோக்கமாகக் கொண்டே விடுதலைப் புலிகள் சிங்கள மக்களைக் கொல்லுகின்றனர்—

அதன் மூலம் 1983 ஜூலை இனக்கலவரம் போன்ற ஒன்றை உருவாக்க அவர்கள் முயல்கின்றனர்.

விடுதலைப் புலிகளின் இந்த முயற்சிக்குப் பலியாகி தற்போதைய நெருக்கடியை தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் தீவிரமாக்கக் கூடாது.

—இவ்வாறு திருமதி பண்டாரநாயக்கா அப்பேட்டியில் தெரிவித்தார். (இ-எ)

## பலாலி மோதலில் 7 சிப்பாய்கள் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 30 பலாலிப் பகுதியில் நேற்றும் மோதல்கள் இடம்பெற்றன. முகாமைச்சுற்றி காவல் அரண் அமைத்து நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் ஆங்காங்கே தாக்குதல் மேற்கொண்டனர்.

கண்ணி வெடித் தாக்குதல்களில் 7 இராணுவத்தினர் காயமடைந்ததாகத் தெரிய வந்தது. அதனைப் பாதுகாப்பு வட்டாரங்களும் ஊர்ஜிதம் செய்தன.

இதேவேளை கடலிலிருந்து காங்கேசன்துறை, மயிலிட்டிப் பகுதிகளை நோக்கித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டன.

நேற்று அதிகாலை 2-30 மணி முதல் பலாலியிலிருந்து ஏவப்பட்ட சுமார் 25 க்கும் மேற்பட்ட ஆட்லறி ஷெல்கள் யாழ். கோட்டையை அண்மித்த பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. (அ-9)

## அ'புரவில் பதற்றம்

அனுராதபுரப் பகுதியில் தொண்டர் படையைச் சேர்ந்த ஒருவர் முஸ்லிம் ஒருவரை சுட்டுக்கொண்றார்.

அதனையடுத்து அந்தப்பகுதியில் சிங்களவருக்கும் முஸ்லிம்களுக்குமிடையே மோதல் ஏற்படக்கூடிய பதற்றமான சூழ்நிலை உருவாகியுள்ளதாம்.

இத்தகவல்களை ஏஜன்சிச் செய்திகள் நேற்று மாலை வெளியிட்டன. [அ-9]

## படையினருக்கு இப்படி பணிப்பாம்

கொழும்பு, ஜூலை 30 வடக்கு- கிழக்கில் பொது மக்களுக்கு எதிராக இராணுவத்தினர் தாக்குதல் நடத்தக் கூடாது என்று அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா எச்சரிக்கை செய்திருக்கிறார் என்று கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

வடக்கு-கிழக்கு யுத்தத்தில் சகலமக்களினதும் ஆதரவைப் படையினர் பெறவேண்டும். நாட்டில் சமாதானம் வேண்டி வழிபாடு செய்கின்றனர். ஆகவே எல்லாச் சமூகங்களுக்கும் இடையே சாதாரண வாழ்க்கையைப் பாதுகாக்க வேண்டும்."

இப்படி அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா படையினரை பணித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

## 13 இந்தியர் வெளியேற்றம்

கொழும்பு, ஜூலை 30 சட்டவிதிகளை மீறி கடந்த சில தினங்களில் இலங்கைக்குள் பிரவேசித்தார்கள் என்று கருதப்பட்ட 13 இந்தியப்பிரசைகளும் ஒரு ஜேர்மனியப்பிரசையும் நாட்டை விட்டுவெளியேற்றப்பட்டனர்.

இப்படிகுடியகல்வு, குடிவரவுத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-எ)

## நல்லூர் இந்து இளைஞர் பேரவை சேவை

கொழும்புத்துறை, ஜூலை30 யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் நல்லூர் ஆலய உற்சவ காலத் தொண்டர் சேவை வழமை போல் இவ்வருடமும் இடம் பெற்று வருகிறது.

இத் தொண்டர் சேவையில் பங்கு கொள்ள விரும்பும் இந்து இளைஞர் மன்றத் தொண்டர்கள், யாழ். நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் இயங்கும் பேரவையின் தொண்டர் சேவை அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தலைவர் திரு.வே. கெ. தனபாலன் அறிவித்துள்ளார். (இ-30)

## மயிலிட்டி வைத்தியசாலை இயங்கவில்லை

கொழும்புத்துறை, ஜூலை30 தற்போதைய சூழ்நிலை காரணமாக மயிலிட்டி அரசினர் வைத்தியசாலை இயங்காத நிலையில் உள்ளது.

இங்கு கடமையாற்றிய ஊழியர்கள் பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலையில் கடமை ஆற்றி வருகின்றார்கள். [இ-30]

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி குழந்தைவேலு

புங்குடு 11, வர்த்தகர் சின்னத்தம்பி குழந்தைவேலு காலமானார்.

முன்னாள் கலேவெல வர்த்தகரான அன்னார் பேரின்பகாந்தியின் அன்புக் கணவரும், கலைச்செல்வி, சுவிற்சர்லாந்து புஷ்பலதா, வசந்தமலர்ச்செல்வி ஆகியோரின் அருமைத் தந்தையாரும், சிவலோகநாதன், சத்தியவடிவேல் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான செல்லத்தம்பி, பரராஜசிங்கம், தம்பிப்பிள்ளை, சோதிராஜா, தில்லையம்பலம், மற்றும் தங்கக்குட்டி, சின்னத்தங்கம் ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 30 ஆம் திகதி திங்களன்று பிற்பகல் 4 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் மணற்காடு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
நா. சுப்பிரமணியம்

வட்டாரம் 12,
புங்குடுதீவு.

[13699]

### திருமதி சாமுவேல் மரியம்மா

கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சாமுவேல் மரியம்மா அவர்கள் 29-07-1990 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு. க.சாமுவேல் அவர்களின் அன்பு மனைவியும், றெஜினா,மேரிஅதிசயம்,ஞானமணி, திரேஸ்நவமணி றொபேட் (மேற்கு ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், J. S. செல்லத்துரை (ஓய்வுபெற்ற சிறைக் காப்பாளர்), S. யேசுதாசன் (-சின்னமணி- மரீனா வெல்டேர்ஸ் உரிமையாளர்), K. நாகராஜா (கட்டட ஒப்பந்தக்காரர்), M. இருதயராஜா (மேற்கு ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 30-07-1990 திங்கட்கிழமை முற்பகல் 11-00 மணியளவில் கோவையூர் புனித மரியாள் ஆலய சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

தகவல்:
S. யேசுதாசன்
[மரீனா வெல்டேர்ஸ் உரிமையாளர்]

இல. 52, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

[13700]


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org